# மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
## பதவி வெற்றிடங்கள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பொருத்தமான தகைமை பெற்று பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தரமான பதவியில் உள்ள ஊழியர்களிடம் இருந்து மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்களுடன் (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு) உரிய நிறுவனத்தின் செயலாளர்/பதிவாளர்/முதல்வர்/பணிப்பாளர் ஊடாக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உதவிப்பதிவாளர்/தாபனக்ககிளை (கல்விசாரா ஆளணி)க்கு 27.04.2026 திகதிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

### பொதுச் சுகாதார பரிசோதகர் தரம் III பதவி

| | |
|---|---|
| தகைமைகள்: | சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர்கள் தேர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் பல்கலைக்கழக முறைமையின் பணியாளராக இருத்தல் வேண்டும். |
| சம்பள அளவு: | U-MT 1 (III) Rs. 51,095-7x540; 10x640 - 60,575 p.m.<br>முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.** |
| தெரிவு முறை: | நேர்முகத் தேர்வு மூலம். |

### சாரதி தரம்(III) பதவி

| | |
|---|---|
| தகைமைகள்: | 1. கனரக வாகனங்களை செலுத்துவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையர் நாயகத்தால் வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் ஓட்டுநர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>2. முதன்மை அரைத் திறன் (U-PL 2) அல்லது முதன்மைத் திறன் இல்லாத (U-PL 1) பிரிவில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்து, தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். |
| சம்பள அளவு: | U-PL 3 (III) Rs. 48,005-16x490-55,845 p.m.<br>முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.** |
| தெரிவு முறை: | பிரயோக பரீட்சைமற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம். |

## உழவு இயந்திர இயக்குநர் தரம் (III)பதவி

தகைமைகள்:

1. தற்போதைய பதவியில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட முதன்மை நிலை திறமையற்ற (U-PL 1) ஊழியர்கள்.

மற்றும்

i. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) இரண்டு (02) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல். மேலும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, ஒவ்வொரு பதவியின் செயல்பாட்டிற்கும் பொருத்தமான, தேசிய தொழிற்கல்வித் தகுதிகள் (NVQ) நிலை 2 அல்லது 3 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ii. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) இரண்டு (02) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல். மற்றும் தொழில்துறை திறன்களுடன் தொடர்புடைய துறையில் ஒரு (01) வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு, தொழில்துறை திறன்களுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் பணி அனுபவத்தை முடித்த முதன்மை நிலை திறமையற்ற (U-PL)1 ஊழியர்கள்.

சம்பள அளவு: U-PL 2 (III) Rs. 44,575-16x490-52,415 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.**

தெரிவு முறை: பிரயோக பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கை கடிதம் இல. 06/2020 இன் நிபந்தனைகளின்படி பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கான நியமனமாகும், சந்தர்ப்பத்தில், அரச தாபனக்கோவையின் அத்தியாயம் VII பிரிவு 09 இற்கமைய உரிய சம்பளப்படி நிலையில் அமர்த்தப்படுவர்.

ஒப்பமிடப்பட்டது
பதிவாளர்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
06.04.2026